1986 நவம்பர் 20]

தமிழகத்தில் வெளிச்சந்தையில் அரிசி விலை.

96—(*வினா எண் 2590) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தமிழக மக்களுக்கு தட்டுப்பாடின்றி வெளிச்சந்தையில் நியாயமான விலையில் அரிசி கிடைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. வெளி மாநிலங்களிலிருந்து வியாபாரிகளால் தமிழகத்திலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் அரிசி கொண்டு வரப்பட்டு விற்கப்படுவதால் வெளிச் சந்தையில் அரிசியின் விலை நிதானமாகவும் கட்டுப்பாட்டிலுமுள்ளது.

உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து கள்ளச் சந்தையில் விற்பதைத் தடுக்க இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பலதரப்பட்ட கட்டுப்பாடு ஆணைகளின்கீழ் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

கட்டுப்பாடு ஆணைகளைத் தீவிரமாக அமல்படுத்துவதன் காரணமாகவும் இதர நடவடிக்கைகள் மூலமும் வெளிச் சந்தையில் அரிசி விலை அதிகமாக உயராமல் தடுக்கப்பட்டு வரப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசி போதுமானதாக இல்லாததால் மக்கள் வெளிச் சந்தையில் அதிகமாக விலை கொடுத்து அரிசியை வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. இதைத் தவிர்த்து மக்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் போதுமான, தரமான அரிசியை வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான, தரமான அரிசியை நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்குவதால் தான் அரிசியின் விலை நிதானத்தில் இருக்கிறது. இல்லை என்றால் அது நிதானம் தவறி என்ன என்ன நிலைமைகளோ ஏற்பட்டு இருக்கக்கூடும். கடந்த ஆண்டைக் கருதுகிறபோது இந்த ஆண்டு அரிசியின் விலை குறைவாகவே உள்ளது.

[1986 நவம்பர் 20

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளில் விலைப் பட்டியல் ஒழுங்காக வைப்பது கிடையாது. கடைக்கு கடை அரிசியின் விலை வித்தியாசம் இருக்கிறது. இதைப்போக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைப் பட்டியல் வைக்காத கடைகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்கள் வழக்கு மன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். எங்காவது அப்படிப்பட்ட தவறுகள் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த இயலாமைக்குக் காரணம் தொடர்ந்து கள்ளக் கடத்தலில் ஒரு சில சமூக விரோதிகள் ஈடுபட்டு வருவதே. ஆகவே இவ்வாறு தொடர்ந்து கள்ளக் கடத்தலில் ஈடுபட்டு வருகின்ற வியாபாரிகளை கருப்புப் பட்டியலில் அரசு வெளியிட முன் வருமா? மேலும் அவ்வாறு கைப் பற்றப்படும்போது அந்த லாரிகளை விடுவிக்க உயர்நீதி மன்றத்தில் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதைத் தடுக்க 'கேவியட்' மனு போட்டு அவர்கள் லாரிகளைத் திரும்பப் பெறாதவாறு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் விலையைப் பொறுத்த வரையில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல பொதுவாக விலைவாசி உயர்வு 'இன்பிளேஷன் ரேட்' அதிகமாக இருந்தாலும் கூட தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரிசியின் விலை கடந்த ஆண்டு 6-11-1985 இல் ஒரு கிலோ ரூ. 3.53, இந்த ஆண்டு 5-11-1986 இல் ஒரு கிலோ ரூ. 3.52 தான், அரிசியின் விலை கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. கள்ளக்கடத்தலைச் செய்பவர்கள் தொடர்ந்து அப்படிச் செய்வார்களானால் அத்தகைய வியாபாரிகளின் பட்டியலை கருப்புப் பட்டியலாக ஆக்குவது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும். உயர்நீதி மன்றத்தில் எத்தகைய முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் அரசு ஆராயும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது சொன்னார்கள், தேவையான அளவு நியாயவிலைக் கடைகளில் கொடுப்பதால் மார்க்கெட் விலை ஏறவில்லை என்று. குடும்ப அட்டைகளுக்கு இப்போது எவ்வளவு அரிசி வழங்கப் படுகிறது? அந்த அரிசி போதவில்லை என்று வெளி மார்க்கெட்

1986 நவம்பர் 20]

டில் வாங்கும்போது விலைகள் உயர்கிறதே---ரூ. 3.52 என்று குறிப்பிட்டார்கள்---இந்த கூட்டுறவு கடைகளில் கொடுக்கும் விலைக்கும், வெளி மார்க்கெட்டில் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைப்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்குமா? இந்த கூட்டுறவு கடைகளில் அந்த கார்டுகளுக்கு அதிகமான அரிசியைக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் எல்லாம் தர இயலும். ஆனாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ரேஷன் கடைகளிலிருந்து அரிசி வெளிக் கடைகளுக்குப்போய் அது பாலிஷ் செய்யப்பட்டு மீண்டும் வியாபாரிகள் அதை விற்கக் கூடிய அளவிற்கு அரிசி ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது என்பது தான் உண்மையான நிலை.

படித்து வேலையில்லாதோருக்கு வழங்கும் உதவிப்பணம்.

97—(*வினா எண் 8177) திரு. க. பாரமலை: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. படித்து வேலையில்லாதோருக்கு வழங்கப்படும் உதவிப்பணம் மதுரை மாவட்டத்தில் கடந்த ஒரு வருடமாக வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உதவிப்பணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னார்கள். ஏற்கனவே நான் கேள்விப்படுவது பல இடங்களில் இப்படி வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வழங்கப்படுகிற உதவிப் பணம் இப்போது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, 1985–86, 1986–87 அதாவது நடப்பாண்டிலும் சேர்த்து, மொத்தம் எத்தனை பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்